

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அண்டவாக்கம் ஊராட்சியில் எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் பாகம் எண்.37 ல் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பில் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்ய சாய்நாதன், துணை செயலாளர் திருஞான செல்வம், பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர் மற்றும் 37 பாகப் பொறுப்பாளர்கள் சி.சுந்தரவரதன், பிரதாப், மதன் பால், நாகராஜன், நாகப்பன், திருஞானமூர்த்தி, சுந்தர், பாலாஜி, மோகன், சின்னசாமி ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி பாகம் எண் 207ல் கழக வெற்றி வேட்பாளர் ஐ.பரந்தாமன் அவர்கள் வாக்கு சேகரித்தார். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் , கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கிரிராஜன் எம்.பி,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கருங்குழியில்

# கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தீவிர பிரச்சாரம்!

திருவள்ளூர், செப்.26-

மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு தேர்தல் பணியாற்ற ஒதுக்கப்பட்டுள்ள கருங்குழி பேரூர் பகுதியில் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

கருங்குழி பேரூரில் உள்ள பாக எண்கள் 59, 60, 61, 62, 63, 94, 95, 96, 97 உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாகச் சென்ற ஆவடி சா.மு. நாசர், பொதுமக்களை நேரில் சந்தித்து தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை எடுத்துரைத்தார். தொடர்ந்து, கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ.ரமேஷ், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, மா.இராஜி, வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் மற்றும் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் சன்.பிரகாஷ், ப.ச.கமலேஷ், ஜி. ஆர்.திருமலை, டி. தேசிங்கு,

ஆர். ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், முரளிகிருஷ்ணன், தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, என். இ. கே. மூர்த்தி, தி.வை.இரவி, ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நடுக்குத்தை கே.சுரேஷ்குமார், பெ.வினோத், வே.தியாகராஜன், ஏ.ஜெ.பவுல், சங்கீதா சீனிவாசன், டி.குமரேசன்,

ஜி. பிரவீன்குமார், ஏ.ஜி.ரவி, ஒ.ஏ.நகூர்கணி, ஆதிகேசவன், டாக்டர் ராஜேஷ்குமார், விமல் ஆனந்த், எம்.மோகன், எம்.இளையான், என். சண்முகம், சாஜகான், ஜி.துர்கா பிரசாத், சத்திய கோ.ரவி மற்றும் வார்டு செயலாளர்கள் கே.காசிநாதன், எஸ்.முருகன், ஆர்.தீனதயாளன், ஏ.பிரகாஷ், எஸ்.தினேஷ், டி.பன்னீர்செல்வம், கே.உதயகுமார், டி.தெய்வநாயகம், எம்.சண்முகம் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் கலந்துகொண்டு தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

### மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல்: கழக வேட்பாளர்

# இ.பரந்தாமனை ஆதரித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவினர் பிரச்சாரம்!

## அணிச் செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான் தலைமையில்!

சென்னை,செப்.26-

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில்அச்சிறுபாக்கம் ஜும்மா மஸ்ஜித் பெரிய பள்ளிவாசல் ஜும்ஆ தொழுகையில் பிரச்சாரம் நடைபெற்றது.

இப்பிரசரத்தில் வெற்றி வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்கள் பங்கேற்று இசுலாமிய மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இப்பிரச்சாரதின் போது முன்னாள் அமைச்சர் பெருமக்கள் சா.மு. நாசர், செஞ்சி மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது ஷகி, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான், மானில துணைச் செயலாளர்கள் நூருல்லா, ராபர்ட் (எ) இராஜதுரை, கழக இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் நூருல் அமீன், பொதுக்குழு உறுப்பினர் உசேன், பேரூராட்சிசெயலாளர் நந்தினிகரிகாலன், வடக்கு மாவட்ட அமைப்பாளர் ஆல்பர்ட், எஸ்.பகதூர் சேட், அமீர் பாஷா, பள்ளிபேட்டை முகமது, கணி முகமது, மாமன்ற உறுப்பினர் செல்வம், தோழமை கட்சிகளான மனிதனேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, எஸ்.டி.பி.ஐ, இந்திய தேசிய லீக், தே.மு.தி. க உள்ளிட்ட கூட்டணிக்கட்சிகளின் மாநில, மாவட்ட, நிர்வாகிகளும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் பல்வேறு மாவட்ட, மாநகர, பகுதி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகிகளும் உடன் பங்கேற்று வாக்குகளை சேகரித்தனர்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, கழக வெற்றி வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து, அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், அப்பகுதியில் தேர்தல் களப்பணிக்கு பொறுப்பேற்றுள்ள உள்ளூர் கழக நிர்வாகிகள் மற்றும் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கழக நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நேற்று (25.09.2026) நடைபெற்றது.





சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் தலைமையில் மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மாமண்டூர் ஊராட்சி, 21 வது பாகத்தில், கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பாலவாக்கம் த.விஸ்வநாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் கிளைச் செயலாளர் சீனிவாசன், குமார், அருண், பகுதி துணைச் செயலாளர் ஜி.விஜயகுமார், டி.ராஜேந்திரன், பிரகாஷ், கன்னியப்பன், சரத், விமல், அப்பு ராஜ், கஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரித்தனர்.

### வணிகர்களுக்கு தி.மு.க. அரசு செய்த சாதனைகளை விளக்கி

# மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## பி.டி.பாண்டிசெல்வம் தலைமையில் கழக வர்த்தக அணியினர் பங்கேற்பு!

சென்னை, செப். 26-

மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து கழக வர்த்தகர் அணியினர் இணைச் செயலாளர் பி.டி.பாண்டிசெல்வம் தலைமையில் வாக்கு சேகரித்தனர்.

மதுராந்தகம் தொகுதியில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் இ.பரந்தாமனை ஆதரித்து கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டிசெல்வம் தலைமையில் வர்த்தகர் அணி துணைச் செயலாளர்கள் வி.பி.மணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், வணிகர் சங்க தலைவர் ஆதிகுருசாமி மற்றும் கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, எஸ்.மோகன், வழக்கறிஞர் மாரிமுத்து, சிலம்பரசன் உள்ளிட்டோர் மதுராந்தகம் தொகுதியில் வாக்கு சேகரித்தனர்.

அதுபோது பொதுமக்களிடம் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலும் அதைத்தொடர்ந்து முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியிலும் இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு வணிகத் துறையிலும் தொழில் துறையிலும் சிறந்து விளங்கியது என்ற வரலாற்று உண்மையை எடுத்துக் கூறினார்.

மேலும் வரலாற்றில் முதல் முறையாக வணிகப் பெருமக்களின் நீண்ட கால கோரிக்கையான வணிக நல வாரியத்தை 1989-ல் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வணிக நல வாரியத்தை அமைத்து நம்முடைய கோரிக்கையை நிறைவேற்றி சிறப்பு செய்தார்.

அதைத்தொடர்ந்து வரிவகைகளை எளிமைப்படுத்தி அதன் மூலம் வணிகர்கள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் முனைவோரை பாதுகாக்கும் பணியையும் செய்து தந்தார்கள் என்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சிப்காட் மற்றும் சிட்கோ தொழில் பேட்டைகளை உருவாக்கி தொழில் கட்டமைப்பை விரிவுபடுத்தி அதன் மூலம் தொழிலும் வர்த்தகமும் வேலை வாய்ப்பு அனைத்து தரப்பு மக்களுக்கும் பயனாக கிடைத்தது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று என்றும் எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தனர்.

மேலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் வணிக நல வாரியம் பல்வேறு சலுகைகளை தந்து புது மெருகேற்ற பட்டு வணிகப் பெருமக்களுக்கு பெருமளவில் அது பயன் பட்டது. மேலும் சிறந்த தொழில் முனைவோர் திட்டங்களான அண்ணல் அம்பேத்கர் வணிக மேம்பாட்டு திட்டமும், மானியத்துடன் கூடிய மூலதனத்தோடு கலைஞர் கைவினை திட்டமும் நிறைவேற்றப்பட்டது அனைவரும் அறிவோம், தொழில் வளர்ச்சி பெருகிட புதிதாக தொழில் தொடங்கிட ஒற்றைச் சாளர முறையை நடைமுறைப்படுத்தி எளிமையாக்கியது போன்ற பல்வேறு எண்ணற்ற நம்முடைய பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி செலுத்தும் வகையிலும் மதுராந்தகம் இடைத்தேர்தலில் இ.பரந்தாமனுக்கு வாக்களித்து தி.மு.கழகத்தை வெற்றி பெறச் செய்தி கழகத் தலைவரின் கரத்தை பலப்படுத்துவதுடன் த.வெ.க. விற்கு தக்கப்பாடம் புகட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.



### மதுராந்தகம் நகரத்தில் – நாளை

# கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வாக்கு சேகரிக்கிறார்!

## தொகுதிப் பொறுப்பாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் அறிவிப்பு!





06.10.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் - வழக்கறிஞர் இ.பரந்தாமன் மதுராந்தகம் நகரத்தில் நாளை (27.9.2026 - ஞாயிற்றுக்கிழமை) உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்க ஊராட்சி வாரியாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வருகை தர உள்ளார்கள்.

அது சமயம் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்தாலோசித்து அனைவருக்கும் முறையாக தகவல் தெரிவித்து வாக்கு சேகரிப்பதற்கு எழுச்சியுடன் ஏற்பாடுகளை செய்து உற்சாக வரவேற்பு அளித்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

| வ.எண் | வார்டு | நேரம் | வ.எண் | வார்டு | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | 9 -வது வார்டு | 08.10 | 13. | 5 -வது வார்டு | 10.10 |
| 2. | 3 -வது வார்டு | 08.20 | 14. | 22 -வது வார்டு | 10.20 |
| 3. | 7 -வது வார்டு | 08.30 | 15. | 23 - வது வார்டு | 10.30 |
| 4. | 8 -வது வார்டு | 08.40 | 16. | 20 -வது வார்டு | 10.40 |
| 5. | 2 -வது வார்டு | 08.50 | 17. | 21 -வது வார்டு | 10.50 |
| 6. | 16 -வது வார்டு | 09.00 | 18. | 10 -வது வார்டு | 11.00 |
| 7. | 17 -வது வார்டு | 09.10 | 19. | 15 -வது வார்டு | 11.10 |
| 8. | 4 -வது வார்டு | 09.20 | 20. | 12 -வது வார்டு | 11.20 |
| 9. | 18 -வது வார்டு | 09.30 | 21. | 13 -வது வார்டு | 11.30 |
| 10. | 19 -வது வார்டு | 09.40 | 22. | 14 -வது வார்டு | 11.40 |
| 11. | 24 -வது வார்டு | 09.50 | 23. | 1-வது வார்டு | 11.50 |
| 12. | 6-வது வார்டு | 10.00 | 24. | 11 -வது வார்டு | 12.00 |

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி - மதுராந்தகம் நகரம்**

**தா.மோ.அன்பரசன் - க.சுந்தர்**

தொகுதிப் பொறுப்பாளர்கள்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி



மதுராந்தகம் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து புக்கத்துரை பாகம் 15ல் கழகத்தினர் வாக்குகள் சேகரித்தனர். இதில் பெரம்பூர் 45வது வட்ட செயலாளர் கி.தினகரன், 46வது வட்டச் செயலாளர் வி.முருகன், 46வது (அ)வட்ட செயலாளர் ச.ராஜன், புக்கத்துரை ஊராட்சி செயலாளர் மு.க அன்பழகன். கே. மாரிமுத்து, கே. மணிவண்ணன், அ.சங்கர், மு. துரைசாமி, வே. அன்பழகன், வட்ட கழக நிர்வாகிகள் இ. கர்ணா, கே.பிரசாந்த், . எஸ். தினேஷ் குமார், ஆர்.பார்த்திபன், எம்.மூர்த்தி, எஸ். முத்துக்குமார், எம்.லூயிஸ், எல்.சாந்தகுமார் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.